**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 349/2025** |
| Prosecution witness | : | P.W. 4 |
| List of Witness | : | A.W |
| Name | : | கலியுகவர்ணன் |
| Father's /Husband Name | : | துரைக்கண்ணு |
| Village | : | குடவாசல் காவல் நிலையம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 59 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 22nd day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த கோபிநாத் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். குற்ற எண்.334/2023 வழக்கின் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 12.07.2023ம் தேதி குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் கோபிநாத் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மணக்கால் அய்யம்பேட்டை நாடார் தெருவைச் சேர்ந்த நடேசன் மகன் சபரிநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 334/2023, ச.பி. 386, 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் புகார்தாரர் குருமூர்த்தி கொடுத்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்பு அன்றைய தினமே பிற்பகல் 12.30 மணிக்கு சம்பவயிடமான வடகண்டம் வெற்றாற்று பாலம் அருகே சாட்சிகள் முருகையன் மற்றும் இராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர்

தயார் செய்தார். அந்த பார்வை மகசர் மேற்கண்ட சாட்சிகளிடம் சம்பவயிடத்திலேயே சாட்சி கையொப்பம் பெற்றார். ( **சம்பவயிடத்தில் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

பின்பு சாட்சிகள் சபரிநாதன், பக்கிரிசாமி, மாரிமுத்து, முருகையன், இராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே சம்பவம் பற்றி கூறிய விபரங்களை வாக்குமூலமாக பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடியதில் கடந்த 12.07.2023 ம் தேதி மதியம் 14.30 மணிக்கு வடகண்டம் பெரிய முதலி ஐய்யனார் கோவில் பஸ்டாப் அருகே எதிரி ஜெகதீசன் என்பவரை குற்ற காரணம் கூறி கைது செய்து பின்பு அவரை விசாரணை செய்து எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வீட்டில் மறைத்து வைத்திருந்த கத்தியை ஆஜர் செய்ததை மகசர் மூலம் கைப்பற்றி சாட்சிகள் அஜய் மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் மாலை 15.20 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். ( **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) (எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்பு கைது செய்யப்பட்ட எதிரியையும் தடயங்களையும் எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் வந்து மேற்படி எதிரியை தக்க வழிக்காவல் மூலம் திருவாரூர், மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார். ( **பின்பு கைப்பற்றப்பட்ட தடயப்பொருளான கத்தியை படிவம் 95 ன் மூலம் சி.பி.எண்.45/2026 எனப் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த தடயபொருளான கத்தி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

சாட்சிகளை முறையாக விசாரணை செய்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் கடந்த 12.07.2023 ம் தேதி எதிரி ஜெகதீசன் என்பவர் மீது 386, 506(ii)இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை காவல் உதவி ஆய்வாளர் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் பார்வையிடாமல் பின்னிட்டு காவல்

நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் தடயபொருட்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து அதற்கேற்ப ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.22 20:35:10 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.